**MCOP No. 13/2023**

**Date: 22.09.2025**

**ம.சா. 1. கருப்பசாமி**

**3ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது. இறந்து போன எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. எனக்கு மொத்தம் 3 குழந்தைகள். அதில் ஒருவர் இறந்து விட்டார். எனது மகன் டிப்ளமோ படிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் எனது மகன் பிட்டராக வேலை செய்வதாக தான் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் வெளநாட்டில் வேலை பார்த்தாக கூறி பாஸ் போர்ட் மற்றும் விசா எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது மகன் வெளிநாட்டில் மாதம் ரூ. 2 இலட்சம் சம்பளம் வாங்கினார் என்று கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் தான் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றான். மேற்படி வாகனத்திற்கு எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று கேட்டால் எனக்கு தெரியாது. விபத்தை பற்றி புகார் நான் கொடுக்கவில்லை. புகார் கொடுத்ததது எனது மகனின் பின்னால் அமர்ந்த ஆகாஷ் தான் புகார் கொடுத்தார். நான் சிலிண்டர் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிரே வந்த லாரியின் ஓட்டுநர் அதிவேகமாவும் அஜாக்கிரையாகவும் ஓட்டவில்லை என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் 3ம் எதிர் மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கல்விச்சான்றிதழ் வெளிநாட்டில் வேலை பார்த்தற்கான சான்றிதழ் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் என்னுடைய மகனின் வருமானத்தை நம்பி வாழ்ந்து வந்தேன் என்று கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம,சா,ஆ, 12 ஆவணத்தில் சம்பள சான்றிதழில் அந்த நாட்டு மதிப்பில் தான் மாத வருமானம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு நிகரான இந்திய வருமானத்தை காட்டுவதற்கு

எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டி வீகிதம் மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. 3ம் மனுதாரர் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.